

**இன்னா செய்யாமை**

குறள் 320

**நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்**
**நோயின்மை வேண்டு பவர்.**

துன்பம் தருவன எல்லாம் துன்பம் செய்தவரின் மேல் சென்று சேர்வன, ஆதலால், துன்பமின்றி வாழ விரும்புவோர் பிறருக்குத் துன்பம் இழைக்க மாட்டார்.

# கஞ்சனுக்குக் கஞ்சன்

ஒரு ஊரில் ஒரு கஞ்சன் இருந்தான். அவன், தன்னை விட ஒரு கஞ்சன் இந்த உலகத்திலேயே இருக்க முடியாது என்று பெருமைப்பட்டுக் கொண்டிருந்தான். ஆனால் ஒருநாள், தன்னையே தூக்கிச் சாப்பிடும் ஒரு உலக மகா கஞ்சன் சற்றுத் தொலைவில் உள்ள ஒரு ஊரில் வசிக்கிறான் என்று கேள்விப்பட்டான் அவன்.

ஆக, தான் இதுவரை 'செலவாளி'யாகத்தான் இருந்திருக்கிறோம் போலிருக்கிறது. உடனே அந்த மகா கஞ்சனிடம் சீடனாகச் சேர்ந்து 'கஞ்சப் பாடம்' கற்க வேண்டும் என்று நினைத்தான். உடனே தனது மகனை அழைத்து, குறிப்பிட்ட கஞ்சனைப் பற்றிக் கூறி, தன்னை அவனது சீடனாக சேர்த்துக் கொள்ள முடியுமா என்று கேட்டு வரும்படி கூறினான்.

அந்த வெளியூர் கஞ்சனை பார்க்கச் செல்பவர்கள் கட்டாயம் வாத்து ஒன்றைக் கொண்டு போய் கொடுக்க வேண்டும் என்றும் இந்தக் கஞ்சன் கேள்விப்பட்டிருந்தான். எனவே ஒரு சிறிய தாளில் ஒரு வாத்தின் படத்தை வரைந்து மகனிடம் கொடுத்து அனுப்பினான். தன் அப்பாவின் அதீத புத்திசாலித்தனத்தை எண்ணி வியந்தபடி புறப்பட்டுச் சென்றான் மகன்.

வெளியூர் கஞ்சனின் வீட்டை அவன் அடைந்தான். ஆனால் அவன் போன வேளையில் அந்தக் கஞ்சன் வெளியே சென்றிருந்தான். வீட்டில் அவனது மனைவி மட்டுமே இருந்தாள். அவளிடம் விடயத்தைக் கூறிய கஞ்சனின் மகன், தான் கொண்டு சென்றிருந்த வாத்துப் படம் வரைந்த துண்டுச் சீட்டைக் கொடுத்தான்.

அந்தச் சீட்டைக் கவனத்துடன் பெற்றுக் கொண்ட வெளியூர் கஞ்சனின் மனைவி, அதை பத்திரமாக ஓரிடத்தில் வைத்தாள். பின்னர், "இந்த ஆரஞ்சுப் பழங்களை உங்கப்பாவிடம் கொண்டு போய் கொடு..." என்றாள்.

பையன் ஆவலுடன் கையை நீட்ட, அவள் தனக்கு அருகில் இருந்த மேசையில் இருந்து பழங்களை எடுத்துக் கொடுப்பதைப் போல வெறுமனே பாவனை செய்தாள். "அடேங்கப்பா... என்ன கஞ்சத்தனம்!" என்று வியந்து கொண்டே திரும்பிச் சென்றான் அவன்.

சிறிதுநேரத்தில் மகாகஞ்சன் வீடு திரும்பினான். அவனிடம், சீடனாகச் சேர ஆசைப்பட்ட ஒருவரின் மகன் வந்ததையும், அவனுக்கு தான் ஆரஞ்சுப் பழங்கள் 'கொடுத்ததையும்' கூறினாள் மனைவி. "அப்படியா... நமக்கு ஒன்று கொடுத்தவர்களுக்கு நாம் பதிலுக்கு ஏதாவது கொடுப்பது தான் நாகரீகம்..." என்ற கஞ்சன்,

"சரி... சரி... நீ எந்த அளவு பழங்கள் கொடுத்தாய்?" என்று கேட்டான். கஞ்சனின் மனைவி கைகளை குவித்துக் காட்டினாள். அதைக் கண்டதும் கஞ்சன் கோபத்துடன் சீறினான்:

"வர வர நீ ரொம்ப செலவாளியாகி விட்டாய்! இவ்வளவு 'பெரிய' பழங்களைக் கொடுத்தால் நமக்குக் கட்டுப்படியாகுமா? இனிமேல் யார் வந்தாலும் சிறிய பழங்களாகக் கொடு..." என்றான்.

# ஆரம்பம்

- 1890-ம் ஆண்டு

உலகின் முதல் போக்குவரத்து சிக்னல் இலண்டன் நகரில் பயன்படுத்தப்பட்டது. இதில் ஒரு ஆச்சர்யமான விடயம் என்னவென்றால் அப்போது எரிபொருளில் இயங்கும் வாகனங்கள் இலண்டனில் எதுவும் கிடையாது. குதிரைகள் இழுத்துச் செல்லும் பேருந்துகள் மட்டுமே இயங்கின.

- 1895-ம் ஆண்டு

முதன் முதலாக பொதுமக்களுக்குத் திரைப்படம் காட்டப்பட்டது. இடம் பிரான்ஸ் தலைநகர் பரிஸ்.

- 1920-ம் ஆண்டு

அமெரிக்காவில் முதல் தானியங்கி போக்குவரத்து சிக்னல் ஓகியோ மாகாணத்தில் உள்ள கிளீவ்லாண்ட் நகரில் பொருத்தப்பட்டது.

- 1945-ம் ஆண்டு

ஐ.நா.சபை தொடங்கப்பட்டது.

- 1958ம் ஆண்டு

அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மையமான நாசா அமைக்கப்பட்டது.

- 1969ம் ஆண்டு

ஒலியை விட வேகமாகச் செல்லும் 'சூப்பர் சோனிக் விமானம்' பிரித்தானியாவில் முதன் முதலில் (வெள்ளோட்டம்) பறந்தது.

- 1976ம் ஆண்டு

சூப்பர் சோனிக் விமானம் முதன் முதலில் பிரான்சுக்கும், பிரித்தானியாவிற்கும் இடையே போக்குவரத்து சேவையைத் தொடங்கியது.

- 1983-ம் ஆண்டு

செயற்கைக்கோள் வழியான தொலைக்காட்சி ஒளிபரப்பு தொடங்கியது.

# இளையோர் உலகம்




## தர்மம்

கந்தசாமி பணக்காரன் ஆனால் கஞ்சன் ஒரு நாள் கந்தசாமி ஊருக்கு வந்திருந்த துறவியைப் பார்க்கச் சென்றான், "மோட்சம் அடைய என்ன வழி" என்று கேட்டான். "உன்னால் முடிந்த தருமம் செய்" என்றார் துறவி.

எறும்புக்கு கொஞ்சம் அரிசி போட்டான். பிச்சைகாரனுக்கு ஒரு பிடி அரிசி போட்டான். மீண்டும் துறவியிடம் சென்றான், கந்தசாமி.

"என்ன தருமம் செய்தாயா?" கேட்டார் துறவி.

"எறும்புகளுக்கு அரிசி போட்டேன், பிச்சைக்காரனுக்கு ஒரு பிடி அரிசி போட்டேன்" பதில் சொன்னான் கந்தசாமி.

துறவி அவனுக்கு சரியான பாடம் புகட்ட எண்ணினார்.

ஒரு பெரிய மரத்தைப் கை நகத்தால் கீறத் தொடங்கினார். எதற்காக அப்படிச் செய்தார்.

அடுத்த இதழில் பார்ப்போம்...

*சென்ற இதழின் முடிவு*

அதற்கு பீர்பால், பதற்றமேதுமடையாமல், அரசே! உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன். குழந்தை தண்ணீரில் விழுந்த பொழுது, படைத் தளபதியை, என்னை மற்றும் வீரர்களை நோக்கி 'குழந்தையைக் காப்பாற்று' என்று ஆணையிடாமல் நீங்கள் குதித்தது ஏன்? என்று கேட்டார்.

அதற்கு கோபம் குறையாத அக்பர் குழந்தையைக் காப்பாற்றுவது என் கடமையா? அல்லது அரசனாக ஆணையிட்டுக் கொண்டிருப்பது பெருமையா? எனப் பதிலுக்கு கேட்டார். அப்போது பீர்பால், சக்ரவர்த்தி அவர்களே! நீங்கள் அன்றைக்கு என்னிடத்தில் கேட்ட கேள்விக்கு விடை இது தான்.

கடவுள், தானே பக்தர்களைக் காக்க உலகிற்கு வருவது ஏன்? வேலையாட்கள் இல்லையா? என்று கேட்டீர்கள். எத்தனை வேலையாட்கள் இருந்தாலும், நீங்களே நீரில் குதித்துக் குழந்தையைக் காக்க நினைத்தது போல, கடவுளும் தானே வந்து மக்களைக் காப்பான் என்றார்.

## கங்காரு அவுஸ்திரேலியாவிற்கு மட்டும் சொந்தமா?



உலகில் அவுஸ்திரேலியா நாட்டைத் தவிர வேறு எங்கும் கங்காரு இனத்தைக் காணமுடியாது. ஏன் அவ்வாறு என்று ஆராயப்பட்டது. இதன்போது ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதாவது, அவுஸ்திரேலியா கண்டமாக ஒருதனித் தீவாக மாறிய பிறகே கங்காரு இனம் தோன்றியது. பாலூட்டி வகையைச் சேர்ந்த கங்காரு வால், நீந்தவோ அல்லது பறக்கவோ முடியாது. இதனால் தீவு நாடான அவுஸ்திரேலியாவில் இருந்து அவை களால் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து செல்ல முடியவில்லை. அவுஸ்திரேலியாவைத் தவிர அருகிலுள்ள வேறு சில தீவுகளிலும் கங்காருக்கள் உள்ளன. ஆனால் இந்தத் தீவுகள் எல்லாம் ஒரு காலத்தில் அவுஸ்திரேலிய கண்டத்துடன் சேர்ந்து இருந்தவைதான் என்பது குறிப்பிடத்தக்கது.

## விடுகதை

*சென்ற இதழின் விடைகள்*

| | |
|---|---|
| 01 மெழுகுவர்த்தி | 06 மயில் |
| 02 உப்பு | 07 தேன்கூடு |
| 03 தபால் பெட்டி | 08 தராசு |
| 04 சாம்பிராணி | 09 புகை |
| 05 மத்தளம் | 10 தென்னை மரம் |

1. ஆடுவான் ஓடுவான் கரைவரை சீறுவான் அவன் யார்?
2. தாய் தெருவோரத்தில் மகள் மன்னர் முடியில் அவர்கள் யார்?
3. உன்னில் என்னைப்பார்த்தேன் என்னில் உன்னைப்பதித்தாய் நாம்யார்?
4. கொம்புள்ளவனிடம் வம்பில்லை, ஆனாலும் உயிர்காக்க ஓடுவதேவேலை இவனுக்கு அவன் யார்?
5. தடுக்குப்போட்டேன் எடுக்கமுடியல்லே அது என்ன?
6. அவனை அடைக்கலாம் பிடிக்கமுடியாது அவன் யார்?
7. ஐந்து வீட்டுக்கு ஒரு அழகு முற்றம் அது என்ன?
8. வெளிச்சத்தில் பிடித்தவனை இருட்டில் அவிழ்த்து விட்டான் அவன் யார்?
9. மாமா தோட்டத்தில் நகராமல் படுத்திருக்கு மதயானை அவன் யார்?
10. காற்றுக்குப் பருப்பான் காற்றிலே பறப்பான் அவன் யார்?

*விடைகள் அடுத்த இதழில்...*